ஓம் தத் ஸத்.

அனுகூலமுனிவர்

அருளிச்செய்த

பரமானந்ததீபம்.

சுத்தப் பதிப்பு.

மதுரை,

S. கந்தசாமி பிள்ளை அவர்களால்

தமது ஸ்ரீ மீனம்பிகை பிரஸில்

பதிப்பிக்கப் பெற்றது.

இதன் விலை] 1949. [அணா 4.

உ

ஸ்ரீ சற்குருவே நம:

குரு துதி.

தாயினு மிரங்கியென் றனைவந் தாண்டருள்
தூயவன் சரணமே சுமக்க வென்றலை
வாய்துதி செயக்கர மலர்க டுய்த்தொழ
நேயமோ டுறுதின நினைக நெஞ்சமே.

—o○:○:○o—

ஆக்கியோன் பெயர்முதலியன.

சீர்பெருகுந்தீர்த்த புரிநந்தி கேசன்
திருக்கோயில் நதிக்கடுத்த கீழ்ப்பாலாகப்
பார்பெருகு மாதவத்தைப் புரிந்துமேவும்
பரிவுடைய வனுகூல முனிவனென்போன்
ஏர்பெருகும் தமிழ்ப்பரமானந்த தீபம்
என்றுரைத்தா னிந்நூலை யோதினோர்கள்
பேர்பெருகு சிவபெருமான் றாளைப்பற்றிப்
பேரின்ப வீடதனைப் பெறுவர்தாமே.

சிவசற்குருவேநம:

பரமானந்ததீபம்.

திருச்சிற்றம்பலம்.

நேரிசை வெண்பா.

தந்தைதா யாவானுஞ் சார்கதியிங் காவானு
மந்தமிலா வின்பமக் காவானு-மெந்தனுயிர்
தானாகு வானுஞ் சரணாகு வானுமருட்
கோனாகு வானுங் குரு.

நூல்.

அஞ்செழுத்தி னுருவாகி யறிவு மாகி
யாதிநடு வீறாகி யநாதி யாகிச், செஞ்சடை
யிற் கொன்றைதும்பை யணிந்தோ னாகித்
தேனாகிப் பாலாகி செகமே யாகி, மஞ்சுல
வுங் குழலுமையோர் பாகனாகி மகிழ்ச்சியுட
னெனையாண்ட குருவுமாகி, வஞ்சமறத்
தொழு மடியா ருளத்தின் மேவும் வள்ளல்
தனைப் புகழ்ந்தேத்தி வணங்குவாமே. (1)

மாலயனு யுருத்திரனாய் மகேச னாகி
மன்னுசதா சிவமாகி வானோராகிக், கால
மொரு மூன்றினுமாய் முனிவோ ராகிக்
ககனமுதற் பூதமெள் திகமு மாகிச், சீல
முடன் றொழுமடியார்க் கெளியோனாகித்
திரைகடலாய் மறைமுடிவாய்ச் சிறியேற்
கன்பாய், மேலுமருட் குருவடிவாய் வந்தாட்
கொண்ட மெய்ப்பொருளை யுளத்தில் வைத்
துக் கருது வாமே. (2)

எவ்வுயிரு மெய்ப்பொருளும் படைத்த
கோமா னெங்குமொன்றாய் நின்றிலங்குஞ்
செம்பொற் சோதி, யிவ்வுலகி லன்புடனே
யர்ச்சித் தேத்து மெளியோர்க ளநுதினமுங்
கருதிச் செய்த, பவ்வமெல்லாம் பற்றறுக்குங்
கருணைக் கண்ணன் பார்வதியோர் பாகம்
வைத்த வேத நாதன், திவ்வியபொற் றாளி
ரண்டுங் கருத்தில் நோக்கித் தினந்தினமுந்
துதித்திறைஞ்சிப் போற்று வாமே. (3)

எல்லார்க்கும் பரமசிவன் துணையா மாகில் எவ்வுயிர்க்கும் அவனருள் சேர்ந் திருக்குமென்றே, பொல்லார்க்கும் இயற் கைகெடப் புரிந்தி டாமல் பொறிவழியில் மனம்பொருந்திச் சுழன்றி டாமல், நல்லார்க் கும் பெரியவர்க்கும் எளியோ ருக்கும் நாடோறுமிரக்க முண்டாய் நடப்பா யாகில், பல்லோர்க்கும் உயிர்க்குயிரா யிருக்கு மெங் கோன் பரிவினொடு கருணையருள் பாலிப் பானே. (4)

புலைகளொடு கொலைகளவு கட்கா மத் தைப் புந்திதனிற் கருதாமல் நிற்பா யாகில், மலைமகளோர் பாகனுந்தன் வசமாய் நிற்பான் மாதவமும் நிலைக்குமிந்த வழிநில் லார்க்கு, அலைகடலிற் றுரும்பதுபோல் மனந்தள் ளாடும் அறிவுதனக் கானிவரும் அதுவல் லாமல், நிலைதவறும் எழுபிறப்பும் நீங்கா தென்றே நீணிலத்தி லருமறைக ளோதும் வாறே. (5)

ஆணவகா மியமாயை மலமோர் மூன்
றும் அடுத்தறிவைக் கெடுக்குமதை யடுக்கப்
போமோ, சாணளவுக் கேறிவந்தால் முழத்
துக் கப்பால் தாழ்த்திவிட்டுத் தனக்கா
ளாய்ப் படுத்திக் கொள்ளும்; வாணிபர்செய்
தொழிலதுபோல் கருத்தால் நோக்கி மல
மூன்றும் பொசிப்பறவே நிற்பா யாகில்,
ஆணவமும் மலமகலும் பரமானந்த வமுத
ருந்தி வாழ்ந்துசுகித் திருக்க லாமே. (6)

தன்னரசு நாடுவிட்டுக் காடு பாய்ந்து
தனித்தொன்றிப் பசுவாகிப் பாசத் தாலே,
பொன்னை மண்ணைப் பெண்ணை நிதந் தேடித்
தேடிப் பொய்யுடலுக் கின்பதுன்பம் வே
ண்டி வேண்டி, மின்னனையார் கொங்கை
யைக்கண் டேங்கித் தாங்கி விருப்புவெறுப்
புற்றழிந்து விரகால் வெந்தே, தன்னுடைய
பதியறியத் திறமில் லாமல் தயங்கினர்க
ளெண்ணிறந்த கோடி யாமே. (7)

முன்னாளில் தன்னைமறந் திச்சைக் காளாய் மூலத்தில் ஆங்கார வடிவாய்த் தோன்றி, எந்நாளுந் திகைப்பூடு மிதித்தாற் போல என்னதென்றும் யானென்றும் இழிவுற் றேங்கித், தன்னாலே தான்கெட்டால் மன்று ளாடுந் தம்பிரா னென்செய்வான் அவன்பொற் றாளைப், பன்னாளும் பூசித்தால் குருவாய்த் தோன்றிப் பக்குவத்தில் தன்னையறி விப்பா னென்றே. (8)

தொட்டிடமும் விட்டிடமும் சொல்லிக் காட்டித் தோற்றமொடுக் கமிரண்டும் விரித்துக் கூட்டிச், சிட்டரிட பக்குவத்தைச் சுற்றிப் பார்த்து திருவருளைக் கொடுக்க வல்லோ னாசா னாகும்; இட்டதொரு கட்டளைக்குப் பதில்சொல் லாமல் இன்பதுன்ப மிரண்டினுக்கு மிடங்கொ டாமல், சட்ட முடன் விட்டிடத்தில் நிட்டை யோகஞ் சாதிக்கும் உத்தமர்கள் சிட்ட ராமே. (9)

என்னதென்றும் யானென்றும் விருப்புற்றென்றும் என்னுடலம் பருத்ததென்றும் இளைத்ததென்றும், தன்னுடலைத் தானென்றும் மதிக்கையாலே தன்மகன்மம் இருவினையுந் துணிவாய்த்தேடிப், பின்னுமுடல் எடுப்பதற்கே கர்த்தாலாகிப் பிறவிவிடாய் கொண்டுழன்ற நெஞ்சே கேளாய், நின்னுடலைப் பகுத்தறிந்து வேறாய்க்கண்டு நின்னறிவைத் தானாக நேசிப்பாயே. (10)

அன்னைதந்தை துணைவர் சுற்றம் பெண்டிர் மக்கள் அச்சுமட்டம் தொட்டிமுத்தம் ஆடு மாடு, நன்னிதியங் கன்னனுடன் செந்நெற் கெல்லாம் நான் எனதென்றலைக்கணுற்றுக் கவலைக் காளாய், என்னசென்மம் எடுத்தலுத்தாய் நெஞ்சேகேளாய் இனியேனும் சுருதியுக்தி நெறியூ டொன்றித், தன்னையின்னா ரென்றறிந்தே யநுபோகித்தால் சம்சாரத் துக்கமெல்லாம் வெளியாங்காணே.

முத்திபெறும் வழியேது யானூர் எந்தன்
மூட்பவம் துலையும் வகை யாதோ வென்று,
பத்தியுடன் அருட்குருவின் சந்நிதானம் பணி
விடைசெய் தொழுக்கமுண்டாய் விசாரித்
தன்பாய், உய்த்துணர்ந்து நடுவணையிக் கணப்
போதேனும் உற்றுளக்கண் மாருமல் பார்த்
தாயானுல், சத்தொடுசித் தானந்த வடிவாய்
எங்குந் தானுகி நின்றபதம் பெறுவ தாமே. ()

ஆவியுடல் பொருள்மூன்றுந் தத்தமென்
றே அருட்குருவின்சன்னிதியிற் சித்தமாக,
மேவியளித் தறியுண்மைப் பொருளைப்பற்றி
மெய்த்தவத்தின் மிக்கோராய் நிற்கு நல்
லோர், பாவையரோடில்லறத்தில் வாழ்ந்
திட்டாலும் பரிவினெடுந் துறவறத்தோ
டிருந்திட்டாலும், பூவுலகில் ஒட்டியும் ஒட்
டாமல் வேருய்ப் புளியோடு பழம்போல்
ஒத் திருப்பர் தாமே. (13)

சாதனமாம் சதுஷ்டயத்தின் விசாரத்
தாலே சந்தேகமுள்ளதெல்லாம் தவறிப்

போகும், பேதமறப் பிரமமொன்றே நித்ய மென்றும் பிரபஞ்சம் அநித்தியமென்று மறிந்தாயானல், ஆதரவாய்ப்ப ரோக்ஷமென் பதுவே யாகும் அபரோக்ஷ ஞானமென்பதி யாதோவென்ருல், காதலுடன் சொல்லாமற் சொல்லிக்காட்டுங் காரணதேசிகனருளாற் பெறுவர் தாமே. (14)

ஒன்ருகி ஒன்றினுக்குள் மூன்றுண்டாகி ஒருமூன்றுக் கிருமூன்ருய் அதிலொன்றுக்குள், விண்ணுகி ஒன்றிலொன்ருய் ஐந்துண்டாகி விரிந்தவைந்தில் ஒன்றொன்றுக் கைந்தைந்தாகிப், பெண்ணுகி ஆணுகி நாலுவாகிப் பிரிந்துலகி ரேழாகிப் பிரமாண்டமாகி, மண்ணுகி மண்ணொடுந்து மாறுமூன்றுங் வந்தவழியே ஒடுங்கி ஒன்ருங் காணே. (15)

ஆவரணம் விக்ஷேபம் அவஸ்தை மாயை அவைநான்கும் முக்குணத்திற் செனித்தவாகும், ஆவரண விக்ஷேபம் அவஸ்த்தை

மாயை அவைநான்கின் காரியங்கள் யாதோ வென்னில், ஆவரண விக்ஷேபம் அவஸ்த்தை மாயை அவைநான்கிற் சிவசீவன் செகத்துண்டாச்சு, ஆவரண விக்ஷேபம் அவஸ்தை மாயை அவைநான்கும் இச்சையற்றோர்க் கில்லை தானே. (16)

இச்சையற்றோர்க் கின்பமில்லை துன்பமில்லை இருவினையோ டிரவுமில்லை பகலுமில்லை, குட்சிதனக் கிரைதேடித் திரிவதில்லைக் குறைவுமில்லை நிறைவுமில்லைக் குலமோயில்லை, சட்சமய வாதமில்லை பேதமில்லை சங்கற்ப விகற்பமில்லைத் தானே தானாய், அச்சமறச் சுகித்திருக்கும் சிசுவைப்போல ஆனந்த விளையாட்டோ டிருப்பர் தாமே. (17)

துவக்கமுதல் எழுதாதும் வாதித் தோங்கித் தொல்லைவினைக் கீடாகித் தோற்றுங் காயங், கவைக்குதவி யற்றுமுழு மேச்சற்

கூடாம் கஸ்த்தியுறு மலமூத்திரக் கடமென் றெண்ணித், தவத்துடையோ ருடல்தளர்ந்து நழுவா முன்னந் தன்னுடலைப். பகுத்தறிவால் தள்ளி யேறிப், பவக்கடலைக் கடப்பதன்றிப் பிறந்தாளாகிப் பவக்கடலிற் படிவர்களோ படிந்தி டாரே. (18)

சொர்ப்பனத்தில் மலடிபிள்ளை பெற்றாற் போலும் சோரனென்று கட்டையைக்கண் டொளித்தாற் போலும், சர்ப்பமென்று பழுதையைக்கண் டயர்ந்தாற் போலும் சடத்தைமெய்யென் றறிவிழந்தோர் பிறந்தாளாகும், சொர்ப்பனக்கண்டெழுந்து பொய் யென் றறிந்தாற் போலும் சோரனென் றோன் கட்டையிதென் றறிந்தாற்போலும், சர்ப்பமென்றோன் பழுதையிதென் றறிந் தாற்போலும் சடத்தையித்தை யென்றறிந் தோன் ஞானி யாமே. (19)

ஆறாறு தத்துவத்தின் வகையே தென் றால் ஆக்கையெனும் ஆலமதி லிருமூன்

றாகும், ஈரூறு ஞுக்குமத்தி லிருபதாகும் இசையான காரணத்துக் கோஸரந்தாகும், கூறுறும் பூதமைந்துங் கூட்டக் கூட்டிக் குலவு சிவ தத்துவமென் றோது நூல்கள், வீறுறு தத்துவங்கள் முப்பத் தாறும் வேறாகக் கண்டறிவே சாட்சியாமே. (20)

மண்ணிடத்திற் றோன்றுகின்ற கடத்தை நீக்கி மண்ணென்று மதித்தறியில் மண்ணே யாம்போற், றண்ணிடத்திற் றோன்றுகின்ற குமிழி தன்னைத் தண்ணென்று மதித்தறியில் தண்ணீ ராகும், பொன்னிடத்திற் றோற்று கின்ற உடமை தன்னைப் பொன்னென்று மதித்தறியில் பொன்னே யாம்போற், தன் னிடத்திற் றோற்றுகின்ற சடத்தை நீக்கித் தானென்று மதித்தறிவே சாட்சி யாமே. ()

அஸ்தியுடன் மாங்கிஷந்தோல் நரம்பு ரோமம் ஐந்தும் உனக்கன்னியமா யிருக்கை யாலே, அஸ்தியுடன் மாங்கிஷந்தோல் நரம்பு

ரோமம் ஐந்துமுதற் பிருதிவியின் கூறதா கும், அஸ்திபுடன் மாங்கிஷந்தோல் நரம்பு ரோமம் ஐந்துவிதம் நீ அறிவாய் அவை நீயல்ல, அஸ்தியுடன் மாங்கிஷந்தோல் நரம்பு ரோமம் ஐந்துனக்கும் உயர்சாட்சி நீயாங் காணே. (22)

மூத்திரம்வாய் நீர்வேர்வை உதிரம் விந்து முதலைந்தும் அன்னியமா யிருக்கை யாலே, மூத்திரம்வாய் நீர்வேர்வை உதிரம் விந்து முதலைந்தும் சலத்தினிடகூற தாகும், மூத்திரம்வாய் நீர்வேர்வை உதிரம் விந்து முதலைந்தும் நீயறிவாய் அவைநீ யல்ல, மூத் திரம்வாய் நீர்வேர்வை உதிரம் விந்து முதலை ந்துக் குயர்சாட்சி நீயாங் காணே. (23)

பசிதாகம் நித்திரை மைதுனம் சோம்ப லைந்தும் பகுத்தறியில் அன்னியமா யிருக்கை யாலே, பசிதாகம் நித்திரை மைதுனம் சோம்ப லைந்தும் பகுத்தறியின் அக்கினியின்

கூறதாகும், பசிதாகம் நித்திரை மைதுனம் சோம்ப லைந்தும் பகுத்தறியில் நீயறிவாய் அவைநீ அல்ல, பசிதாகம் நித்திரை மைது னம்சோம்ப லைந்தும் பகுத்தறியில் உயர் சாட்சி நீயாங் காணே. (24)

ஓடல்இருந் திடல்நடத்தல் படுத்தல் தாண்டல் ஓரைந்தும் அன்னியமா யிருக்கை யாலே, ஓடல்இருந் திடல்நடத்தல் படுத்தல் தாண்டல் ஓரைந்தும் மாருதத்தின் கூற தாகும், ஓடல்இருந் திடல்நடத்தல் படுத்தல் தாண்டல் ஓரைந்தும் நீயறிவாய் அவைநீ யல்ல, ஓடல்இருந் திடல்நடத்தல் படுத்தல் தாண்டல் ஓரைந்துக் குயர்சாட்சி நீயாங் காணே. (25)

இராகமொடு மோகவெட்கம் பயம் துவேஷம் இவை ஐந்தும் அன்னியமா யிருக்கை யாலே, இராகமொடு மோகவெட் கம் பயம் துவேஷம் இவை ஐந்தும் ககனத்

தின் கூறதாகும்; இராகமொடு மோகவெட்
கம் பயம் துவேஷம் இவை ஐந்தும் நீஅறி
வாய் அவை நீயல்ல, இராகமொடு மோக
வெட்கம் பயம் துவேஷம் இவை ஐந்துக்
குயர்சாட்சி நீயாங் காணே. (26)

தசைநரம்பு துவக்குமயிர் எலும்பு வாய்
நீர் தன்னொடுசுக் கிலங்குருதி சிறுநீர் வேர்
வை, பசிதாகம் மைதுனம்கண் ணுறக்கம்
சோம்பல் படுத்தல் இருந்திடல்நடத்தல்
ஓடல் தாண்டல், திசைபு கழிராகமொடு
மோகவெட் கம்பயம் திவேஷம் அச்ச மிவ்
வகைகளிருபத் தைந்தும், இசைபெறும்இம்
பூதபஞ்சீ கரண தூலமென்னும்உடல் அன்
னமய கோசங் காணே. (27)

அன்னமய மென்பதுவே தூல தேக
மாகும் இனிப் பிராணமய மனோமயத்தோ,
டுன்னிவிஞ் ஞானமயத் துடனிம் மூன்றும்
உற்றதொரு சூக்கும சரீரமாகும், பின்னு
மொரு ஆனந்தமய கோசமென்றும் பெருகிய
காரணதேக மென்பார் மேலோர், யன்ன

ரிய உடல்மூன்றும் கோச மைந்தும் பகுத்
தறியு முயர்சாட்சி நீயாங் காணே. (28)

காரணசூக் குமதால தேக மூன்றுங் கண்டறியில் அன்னியமா யிருக்கை யாலே, காரணசூக் குமதால தேக மூன்றுங்கண்டறியில் ஐங்கோச பாச மாகும், காரணசூக் குமதால தேக மூன்றுங் கண்டறியில் நீ அறிவாய் அவைநீ யல்ல, காரணசூக் குமதால தேக மூன்றுங் கண்டறியில் உயர்சாட்சி நீயாங் காணே. (29)

கோசமைந்தும் ஒவ்வொன்றாய்ப் பிரித்து வேறாய்க் குறித்தறியில் அன்னியமா யிருக்கை யாலே, கோசமைந்தும் ஒவ்வொன்றாய்ப் பிரித்து வேறாய்க் குறித்தறியில் பூதமைந்தின் கூறதாகும், கோசமைந்தும் ஒவ்வொன்றாய்ப் பிரித்து வேறாய்க் குறித்தறியில் நீஅறிவாய் அவைநீ யலல, கோசமைந்தும் ஒவ்வொன்றாய்ப் பிரித்து வேறாய்க் குறித்தறியில் உயர்சாட்சி நீயாங் காணே. (30)

— ஞாதுருவி னொடுதோத்திரஞ் சமானன் வாக்கு நான்குமுனக் கன்னியமா யிருக்கை யாலே, ஞாதுருவி னொடுதோத்திரஞ் சமானன் வாக்கு நான்குமுதற் சத்தமதின் குணமதாகும், ஞாதுருவி னொடுதோத்திரஞ் சமானன் வாக்கு நான்குமுதல் நீயறிவாய் அவைநீயல்ல, ஞாதுருவினொடு தோத்திரஞ் சமானன் வாக்கு நான்கினுக்கும் உயர்சாட்சி நீயாங் காணே. (31)

மனதுதொக்கு வியானனுடன் பாணி நான்கும் மதித்தறியில் அன்னியமா யிருக்கையாலே, மனதுதொக்கு வியானனுடன் பாணி நான்கும் மதித்தறியில் பரிசமதின் குணமதாகும், மனதுதொக்கு வியானனுடன் பாணி நான்கும் மதித்தறியில் நீ அறிவாய் அவைநீ யல்ல, மனதுதொக்கு வியானனுடன் பாணி நான்கும் மதித்தறியில் உயர்சாட்சி நீயாங் காணே. (32)

புத்திசட்சு உதானனுடன் பாதம் நான்கும் புகன்றறியில் அன்னியமா யிருக்கையாலே, புத்திசட்சு உதானனுடன் பாதம் நான்கும் புகன்றறியில் ரூபமதின் குணமதாகும், புத்திசட்சு உதானனுடன் பாதம் நான்கும் புகன்றறியில் நீஅறிவாய் அவைநீயல்ல, புத்திசட்சு உதானனுடன் பாதம் நான்கும் புகன்றறியில் உயர்சாட்சி நீயாங்காணே. (33)

சித்தமொடு சிங்குவைய பானன் குய்யம் செறிநான்கும் அன்னியமா யிருக்கை யாலே, சித்தமொடு சிங்குவைய பானன்குய்யம் செறிநான்கும் பிரதமதின் குணம தாகும், சித்தமொடு சிங்குவைய பானன் குய்யம் செறிநான்கும் நீஅறிவாய் அவைநீ அல்ல, சித்தமொடு சிங்குவைய பானன் குய்யம் செறிநான்குக் குயர்சாட்சி நீயாங் காணே. (34)

ஆங்காரம் ஆக்கிராணம் குதம் பிராணன் அவைநான்கும் அன்னியமா யிருக்கை யாலே, ஆங்காரம் ஆக்கிராணம் குதம் பிராணன் அவை நான்கும் கந்தமதின் குணம தாகும், ஆங்காரம் ஆக்கிராணம் குதம் பிராணன் அவைநான்கும் நீஅறிவாய் அவைநீ அல்ல, ஆங்காரம் ஆக்கிராணம் குதம் பிராணன் அவைநான்குக் குயர்சாட்சி நீயாங் காணே. (35)

தோத்திரஞா னுருசமானன் வியானன் வாக்கு தொக்குமனம் புத்திசட்சு உதானன் பாணி, தேற்றுசித்தம் ஆங்காரம பானன் பாதம் சிங்குவையாக்கிராணம் குதம் பிரா ணன் குய்யம், சாற்றுமிவை ஐந்நான்கும் யாதோ வென்னில்தன்மாத்திர பஞ்சீகிருத குணம தாகும், எற்றபஞ்சீ கிருத சூக்கும பூத மெனுமுடலுக் குயர்சாட்சி நீயாங் காணே. (36)

செவியுடம்பு கண்மூக்கு நாக்கு தாள் வாய் சென்னிகழுத்து தடுகன்னம் சிறுநீர் தாரை, குவிமுலைமார் பிடை துடைதோள் வயிறுகைகால் குண்டிகொப்பூழ் தசைநரம் போடென்பு ரோமம், இவை முதற்கொண் டென்ன வென்றே தன்னதாக இயம்பில் உனக்கன்னியமா யிருக்கை யாலே, இவை யனைத்துந் தானல்ல சடமாமென்றே இசைந் தறியில் உயர்சாட்சி நீயாங் காணே. (37)

என்னுடைமை என்பூமி என்வெள் ளாண்மை என்வீடு என் வாசல் என்றுற் போலும், என்னுடைய மனம் புத்தி என்றுங் காரம் என்னுடலம் என்பிராணன் என்றுற் போலும், உன்னுடைய காரியமா யிருக்கை யாலே உன்னையின்று றென்றறியா தவைநீ யல்ல, உன்னுடைய காரியங்கள் அனைத் தும் வேறாய் உய்த்தறியில் உயர்சாட்சி நீயாங் காணே. (38)

தேகாதி பிரபஞ்ச நாம ரூபம் தேர்ந்தறியில் அன்னியமா யிருக்கை யாலே, தேகாதி பிரபஞ்ச நாமரூபம் தேர்ந்தறியில் பூதமைந்தின் கூற தாகும், தேகாதி பிரபஞ்ச நாம ரூபம் தேர்ந்தறியில் நீ அறிவாய் அவைநீ யல்ல, தேகாதி பிரபஞ்ச நாமரூபம் தேர்ந்தறியில் உயர்சாட்சி நீயாங் காணே. (39)

அணுத்திரண காஷ்டமுதல் அண்டபிண்டம் அகண்டமெங்கும் அன்னியமா யிருக்கை யாலே, அணுத்திரண காஷ்டமுதல் அண்ட பிண்டம் அகண்டமெங்கும் பூதமைந்தின் கூற தாகும், அணுத்திரண காஷ்டமுதல் அண்டம் பிண்டம் அகண்ட மெங்கும் நீ யறிவாய் அவைநீ யல்ல, அணுத்திரண காஷ்ட முதல் அண்ட பிண்டம் அகண்டமெங்கும் உயர்சாட்சி நீயாங் காணே. (40)

பிருதிவியப்புடன்தேயு வாய்வாகாசம் பிரிவைந்தும் அன்னியமா யிருக்கை யாலே,

பிருதிவியப் புடன்தேயு வாய்வா காயம் பிரி வைந்தும் விக்ஷேப சத்தி யாகும், பிருதி வியப் புடன்தேயு வாய்வாகாயம் பிரிவைந் தும் நீஅறிவாய் அவைநீ யல்ல, பிருதிவியப்பு டன்தேயு வாய்வா காசம் பிரிவைந்துக் குயர் சாட்சி நீயாங் காணே. (41)

சத்த ஸ்பரிசரூப ரசமுங் கந்தம் தானைந் தும் அன்னியமா யிருக்கை யாலே, சத்த ஸ்பரிசரூப ரசமுங் கந்தம் தானைந்தும் விக்ஷேப சத்தியாகும், சத்த ஸ்பரிசரூப ரசமுங் கந்தம் தானைந்தும் நீயறிவாய் அவைநீ யல்ல, சத்தஸ்பரிசரூப ரசமுங் கந்தம் தானை ந்துக் குயர்சாட்சி நீயாங் காணே. (42)

சாக்கிரசொற் பனசுழுத்தி யவஸ்தை மூன்றும் சார்ந்தறியில் அன்னியமாயிருக்கை யாலே, சார்க்கிரசொற் பனசுழுத்தி யவஸ்த் தை மூன்றும் சார்ந்தறியில் விக்ஷேப சத்தி யாகும், சாக்கிரசொற் பனசுழுத்தி யவஸ்தை

மூன்றும் சார்ந்தறியில் நீயறிவாய் அவைநீ
யல்ல, சாக்கிரசொற் பனசுழுத்தி யவஸ்தை
மூன்றும் சார்ந்தறியில் உயர்சாட்சி நீயாங்
காணே. (43)

ஆறாறு தத்துவமும் பெருக்கிப்பார்க்கில்
அவை அனைத்தும் பிரமாண்ட மாகிநிற்கும்,
பூறான பிரமாண்ட மதனைப் பார்க்கில் பூத
மைந்துங் குள்ளாகி ஒடுங்கிப் போகும்,
வாறான பூதமைந்து சுருக்கிப் பார்க்கில்
வலிதான விக்ஷேபத் தொடுங்கிப் போகும்,
வேறான விக்ஷேப சத்தி தானும் விபுவான
பிரமவித்தோ டொன்றிப் போமே. (44)

தானாகி நின்றிலங்கும் ஒன்றுக் குள்ளே
சராசர மெல்லாந்தோன்றி ஒடுங்கிப் போ
கும், தானாகி நின்றிலங்கும் ஒன்றை விட்டால்
சார்மனத்து வந்தவற்றைத் தள்ளமாட்டாய்,
தானாகி நின்றிலங்கும் ஒன்றும் மோன சற்
குருவின் சந்நிதியிற் காத்தா யானால், தானாகி

நின்றிலங்கும் ஒன்றோ டொன்றி தற்சாட்சி தாளுகி வாழ்க லாமே. (65)

பத்துலட்சம் கோடிநன்னூல் ஆய்ந்தா லென்ன பாரடங்கும் வலம்புரியாய்ச் சூழ்ந் தாலென்ன, அத்தைவிட் டித்தைக்கைக் கொள்ளென் ருற்போல ஆரணத்துட் பொரு ளையல்லோ வறிய வேணும், தத்துவத்தை நித்தநித்தம் பற்றிப் பார்த்து தன்னையின்ன ரென்றறிந்து பற்று நீங்கி, அத்துவிதந்தாளுகி நிற்பா யாகில் அழியாத வீட்டின்பம் பெரு குந் தானே. (46)

மந்திரங்காற் பங்குமதி முக்காற் பங்கும் வந்தடுத்தால் மாத வத்தோர் தங்கட் கெல் லாம், சந்திரனும் சூரியனும் நேரிட்டாற் போல் தற்சொரூபப் பிரகாசம் வெளியாய்த் தோன்றும், எந்திரங்கள் எழுதிவைத்துப் பூசித்தென்ன எண்ணரிய நூல்கள் முற்றும் வாசித்தென்ன, தந்திரத்தால் தன்னைநன்ற

யறிய வேணும் தனையறிந்தால் தலைவனையும் அறியலாமே. (47)

நாடறிந்த பார்ப்பார்க்குப் பூணு நூல்கள் நடுமார்பி லிருந்தென்ன இராவிட்டாலென், வீடறிந்த பார்ப்பார்க்குத் திருவேடங்கள் மேனிதனி லிருந்தாலென் னிராவிட்டாலென், பாடறிந்து பாடுபட்டாற் பலனுண்டாகும் பாடறியார்தங்களுக்கே கேடென்றாற்போல், கூடறிந்து குடியிருந்தே சுகித்தோர்க் கெல்லாம் கூற்றன்வந்து பிடித்தடித்துக் கொல்வானன்றே. (48)

இல்லாத மாயைதனை உண்டென் றெண்ணி இருவினையைப்புரிந்தவந் நெறியேசென்று, செல்லாத காசதுபோல் நாணு பேதச் சென்னவா ரிதியிலுழன் றலைவதெல்லாம், பொல்லாத மனத்திலுடைச் செயலென் றெண்ணிப் பொருந்தறியார்க் கிப்புவியிற் பலனேதென்றால், கல்லான நெஞ்சுடைய நமன்கை

பட்டுக் கலங்குவதே கைகண்ட பலனு
மன்றே. (49)

இச்சைக்கு வித்தான மனதைப் பற்றி
யிழுத்துவந்து மூலத்தில் நிறுத்திக் கொண்டு
எச்சரிக்கை யாகநித்தம் லயிக்கப் பாரு
எண்ணிறந்த கன்மமெலாம் வெண்ணீ றாகும்
நிச்சயித்துப் பாராமல் உண்டித் தீயால்
நீணிலத்தில் பாஷாண்டி வேஷம் பூண்டு
பிச்சையெடுத் துண்டாலும் பிறப்புப்போமோ
பிச்சையிட்டோர்க் கருள்வீடு பெருகுந்தானே

ஆங்காரப் புனத்தைவெட்டிச் சுட்டு நீற்றி
ஆட்கொண்ட குருபதத்தை நிதமும் போற்றி
நீங்காமல் நாசிநுனி நடுவில் நோக்கி
நிஷ்டைபுரிந் தறிவுருவாய் நிற்பா யாகில்
தேங்காத வானந்த வெள்ளந் தேங்கும் [கும்
தெள்ளமுத முண்டாற்போல் உள்ளம்பொங்
தீங்கான பிறவிவிடா யுடனே நீங்கும்
சித்தமென்று நூல்பலவும் செப்புந் தானே.()

உடல்பொருளாவியுமுடனே தன்னதாக [றி
உகந்தடிமைக்கொண்டபிரான் றாளைப்போற்
அடவுடனே மெய்ஞ்ஞான நூல்களாய்ந்து
அறியபர மானந்த தீப மென்றே [றும்
திடமுறவே உரைத்ததமிழ் ஐம்பத் தொன்
றினந்தோறுங் கற்றுணர்ந்து விசாரித்தோர்க
மடமையெனும் பசுபாச வறிவு நீங்கி [ள்
மன்னுபதி யொடுங்கூடி வாழ்வர்தாமே.(52)

தூலவுட னீயல்ல வென்று போனாற்
றொந்த சட்பாவ விகாரங்களேது
தூலவுட னீயல்ல வென்று போனாற்
றொந்தமாம் மானாபி மானமேது
தூலவுட னீயல்ல வென்று போனாற்
றொந்தகுல கோத்திரவன் ணாதியேது
தூலவுட னீயல்ல வென்று போனாற்
றொந்தாதிக் குயர்சாக்ஷி நீயாங்காணே. (53)

சமட்டியாந் தூலசரீ ரத்தை நன்றாய்ச்
ச்சார்ந்தறிவி லன்னிய மாயிருக்கையாலே

சமட்டியாந் தூலசரீ ரத்தை நன்றாய்ச்
சார்ந்த றியிலீன்ற துவே பஞ்சபூதஞ்
சமட்டியாந் தூலசரீ ரத்தை நன்றாய்ச்
சார்ந்தறியில் நீயறிவா யதுநீயல்ல
சமட்டியாந் தூலசரீ ரத்தை நன்றாய்ச்
சார்ந்தறியு முயற்சாக்ஷி நீயாங்காணே. (54)

சூக்கவுட னீயல்ல வென்று போனாற்
றொந்த பலா பலபசியா திகடானேது
சூக்கவுட னீயல்ல வென்று போனாற்
றொந்த மாஞ் சத்தவச னாதியேது
சூக்கவுட னீயல்ல வென்று போனாற்
றொந்த சாஞ் சல்லியரா காதியேது
சூக்கவுட னீயல்ல வென்று போனாற்
றொந்தங்கட் குயர்சாக்ஷி நீயாங் காணே. (55)

சர்வவிந்தி ரியங்கரணம் பிராணன்
சார்ந்தறியி லன்னியமா யிருக்கையாலே
சர்வவிந்தி ரியங்கரணம் பிராணன்
சார்ந்தறியின் மாத்திரையே யீன்றதாகும்

சர்வவிந்தி ரியங்கரணம் பிராணன்
சார்ந்தறியில் நீயறிவா யதுநீயல்ல.
சர்வவிந்தி ரியங்கரணம் பிராணன்
சார்ந்தறியு முயர்சாக்ஷி நீயாங்காணே. (56)

சமட்டியாஞ் சூக்கும சரீரந் தன்னைச்
சார்ந்தறியி லன்னியமா யிருக்கை யாலே
சமட்டியாஞ் சூக்கும சரீரந் தன்னைச்
சார்ந்தறியி லீன்றதுவே சூக்கபூதம்
சமட்டியாஞ் சூக்கும சரீரந் தன்னைச்
சார்ந்தறியில் நீயறிவா யதுநீயல்ல
சமட்டியாஞ் சூக்கும சரீரந் தன்னைச்
சார்ந்தறியு முயர்சாக்ஷி நீயாங்காணே. (57)

மூலவுட னீயல்ல வென்று போனால்
முரண்மேவு மறிவறியாமை கடானேது
மூலவுட னீயல்ல வென்று போனால்
முரண்பிரியமோதப் பிரமோதமேது
மூலவுட னீயல்லவென்று போனால்
முரண் மூடசடசூனி யன்றுமேது

மூலவுட னீயல்ல வென்று போனால்
முரானாதிக் குயர்சாக்ஷி நீயாங்காணே. (58)

சமட்டி காரண சரீரத்தை நன்றாய்ச்
சார்ந்தறியி லன்னியமா யிருக்கையாலே
சமட்டி காரண சரீரத்தை நன்றாய்ச்
சார்ந்தறியில் விக்ஷேப மீன்றதாகும்
சமட்டி காரண சரீரத்தை நன்றாய்ச்
சார்ந்தறியில் நீயறிவா யதுநீயல்ல
சமட்டி காரண சரீரத்தை நன்றாய்ச்
சார்ந்தறியு முயர்சாக்ஷி நீயாங்காணே. (59)

விசுவ தைசத பிராக்ஞனை நன்றாய்
விசாரிக்கி லன்னியமா யிருக்கையாலே
விசுவ தைசத பிராக்ஞனை நன்றாய்
விசாரிக்கில் ராசதத்திற் செனித்ததாகும்
விசுவ தைசத பிராக்ஞனை நன்றாய்
விசாரிக்கில் நீயறிவா யதுநீயல்ல
விசுவ தைசத பிராக்ஞனை நன்றாய்
விசாரிக்கு முயர்சாக்ஷி நீயாங்காணே. (60)

இவ்வுடல்க ளவத்தையபி மானியாதி
யிவையன்றேற் புண்ணிய பாவாதியில்லை
இவ்வுடல்க ளவத்தையபி மானியாதி
யிவையன் றேற்சுவர்க்க நரகாதியில்லை
இவ்வுடல்க ளவத்தையபி மானியாதி
யிவையன்றேற்பந்த மோக்ஷங்க ளில்லை
இவ்வுடல்க ளவத்தையபி மானியாதி
யிவைகளினுக் குயர்சாக்ஷி நீயாங்காணே. (61)

விரட்டாதி சரீரங்கண் மூன்றுமூன்றி
விசாரிக்கி லன்னியமா யிருக்கையாலே
விராட்டாதி சரீரங்கண் மூன்றுமூன்றி
விசாரிக்கின் முக்குணத்தில் செனித்ததாகும்
விராட்டாதி சரீரங்கண் மூன்றுமூன்றி
விசாரிக்கில் நீயறிவா யதுநீயல்ல
விராட்டாதி சரீரங்கண் மூன்றுமூன்றி
விசாரிக்கி லுயர்சாக்ஷி நீயாங்காணே. (62)

சிருஷ்டிதிதி சங்கார வவத்தை மூன்றுந்
தேர்ந்தறியி லன்னியமா யிருக்கையாலே

சிருஷ்டிதிதி சங்கார வவத்தைமூன்றுந்
தேர்ந்தறியிற் பிரமாதி தொழில தாகுஞ்
சிருஷ்டிதிதி சங்காரவவத்தை மூன்றுந்
தேர்ந்தறியில் நீயறிவா யதுநீயல்ல
சிருஷ்டிதிதி சங்காரவவத்தை மூன்றுந்
தேர்ந்தறியு முயர்சாட்சி நீயாங்காணே. (63)

பிரமனொடு விட்டுணு ருத்திரனை யூன்றிப்
பிரித்தறியி லன்னியமா யிருக்கையாலே
பிரமனொடு விட்டுணு ருத்திரனை யூன்றிப்
பிரித்தறியிற் சத்துவமே யீன்றதாகும்
பிரமனொடு விட்டுணு ருத்திரனை யூன்றிப்
பிரித்தறியில் நீயறிவா யதுநீயல்ல
பிரமனொடு விட்டுணு ருத்திரனை யூன்றிப்
பிரித்தறியு முயர்சாக்ஷி நீயாங்காணே. (64)

விராட்டாதி யவத்தையபி மானியீருய்
வேறதனுன் முக்கியசட் குணங்களில்லை
விராட்டாதி யவத்தையபி மானியீருய்
வேறதனுற் பிரபுத்துவ வலியேயில்லை

விராட்டாதி யவத்தையபி மானி யீருய்
வேறதனு லட்டகுணங் களுமே யில்லை
விராட்டாதி யவத்தையபி மானி யீருய்
வேறதனு லுயர்சாக்ஷி நீயாங்காணே. (65)

சிவ னீசுரன் ஜகத்திம் மூன்றுந்தான்
நேர்ந்தறியி லன்னியமா யிருக்கை யாலே
சிவ னீசுரன் ஜகத்திம் மூன்றுந்தான் [ம்
நேர்ந்தறியின் முக்குணத்திற் செனித்தாகு
சிவ னீசுரன் ஜகத்திம் மூன்றுந்தான்
நேர்ந்தறியில் நீயறிவா யதுநீயல்ல
சிவனீசுரன் ஜகத்திம் மூன்றுந்தான்
நேர்ந்தறியு முயர்சாக்ஷி நீயாங்காணே. (66)

சத்துவமொடுரச தமோகுணங் கண்மூன்றுஞ்
சார்ந்தறியி லன்னியமா யிருக்கை யாலே
சத்துவமொடுரச தமோகுணங் கண்மூன்றுஞ்
சார்ந்தறியிற் பிரகிருதி யீன்றதாகுஞ்
சத்துவமொடுரச தமோகுணங் கண்மூன்றுஞ்
சார்ந்தறியில் நீயறிவா யதுநீயல்ல

சத்துவமொடுரச தமோகுணங் கண்மூன் றுஞ்
சார்ந்தறியு முயர்சாக்ஷி நீயாங்காணே. (67)

ஆதியாம் மூலப்பிர கிருதியைத்தா
ஞ்புங்கா லன்னியமா யிருக்கையாலே
ஆதியாம் மூலப்பிர கிருதியைத்தா
ஞுபுங்கா லுன்னிடத்தே விவர்த்தமாகும்
ஆதியாம் மூலப்பிர கிருதியைத்தா
ஞுபுங்கால் நீயறிவா யதுநீயல்ல
ஆதியாம் மூலப்பிர கிருதியைத்தா
ஞய்ந்தறியு முயர்சாக்ஷி நீயாங்காணே. (68)

ஆதியாம் மூலப்பிர கிருதியோடே
யானதிரி குணமகதத் துவமாங்காரம்
ஆதியாம் மாத்திரையும் பஞ்சபூத
மானசராசரமுதலாய் மற்றுமெல்லாம்
ஆதியாமப்பதனைத் தவிரவேறு
யானதிரை நுரைதிவலை குமிழியில்லை
ஆதியாம் பிரமமா முன்னின்வேறு
யானவைக ளணுவுமிலை யெல்லாநீயே. (69)

பழுதையா டகமதிலே செனித்ததான
பணிமகுட கேயூர குண்டலாதி
பழுதையா டகமதனைத் தவிரவேறோர்
பார்தனிலே யிதுபோற் செனியாகின்ற
பழுதிலறி வுண்மையா னந்தநித்த
பரிபூர்ணப் பிர்மசொரூபந் தன்னிற்
பழுதனவாஞ் சீவே சுரஜகத்தும்
பரிபூர ணப்பிரம மாகுந்தானே. (70)

நித்தியமேகம்பூரணம் பரமானந்தம்
நிமலகேவல பரதத்துவ சத்தார்த்தஞ்
சுத்தபரப் பிர்மமவச் சின்னசீவ
சுயந்துரிய கூடத்த சாக்ஷிபோதஞ்
சத்திய சஞ்சலரகித நிட்பிரபஞ்சஞ்
சருவசமஞ்சாந்த சூக்குமமேமுத்தம்
புத்தசிதானந்தத்துவ விபுவான்மாநீ
புத்திரனே நீயதுவா யாகுவாயே. (71)

நிர்க்குணா னந்தபரப் பிரமநானே
நிருலேப ஜகசீவ பரமுநானே

நிர்த்தோட வப்பிரமேயனுமேநானே
நிருபத்திர வசரீரதாணுநானே
நிர்ச்சம்பந்தனசலனனணுவுநானே
நிரிந்திரிய வப்பிராண சிவனுநானே
நிர்ச்சீவ நிருவிகாரமுமேநானே
நிர்விடைய வகண்டமெலாம்நானேநானே:()

பரமானந்த தீபம் முற்றிற்று.

சிவானந்த போதம்.

மனிதரிலும் பறவையுண்டு விலங்குண்டு
கல்லுண்டு மரமுமுண்டு
மனிதரிலு நிர்வாமுஞ் சாதியுண்டு
அநேககுல மனிதருண்டு
மனிதரிலு மனிதருண்டு வானவரு
மனிதராய் வருவ துண்டு
மனிதரிலே பிறப்பறுக்க வந்ததே
அருமையென வகுத்தார் முன்னோர்.

முற்றிற்று.

ஆக்கையெனும் புழுக்குரம்பைப்

அணைந்தணையாப் பொருளை

அருளொளியைப் பராபரத்துக்

சப்புரமா மறிவை

நீக்கமற மயிர்முனைக்கு

மிடமறவெங் கெங்கு

நிறைந்துநின்ற முழுமுதலை

நினைவிலெழுஞ் சுடரைப்

பாக்கியங்கள் செய்தனந்தத்

தவக்குறைகள் முடிக்கும்

பழவடியார் தமக்குதவும்

பசுந்துணர்கற் பகத்தை

வாக்குமன விகற்பத்தா

லளவுபடா வொன்றை

மாசற்ற வெறுவெளியை

மனவெளியி லடைப்பாம்.

தேசமுறு பகவானு யச்ச மெல்லாந்
தீர்விடமா வாய்மனமே திரள்சங் கற்பம்
வீசுதரு மயல்சொடியாய் நீயாங் காட்டை [ன
வெட்டிநெடும் பூமியிலே விநோதஞ்செய்வே

மங்களகரமான பிரம்மஸ்வரூபமாய்
அந்நியின் சத்தியின் இயல்பைத் தரிசித்தல்.

வேண்டியவா விளையாடித் தற்ப தத்தை
மேவினன்கே வலமானேன் வெற்றி யுற்றே
னீண்டுவுயர் திருவான மானேன் செய்வ
திலதானேன் பிறிவற்றே னிடம்வே றற்றே
னீண்டதெளி வுடைமையொளி வுடைமையுண்மை
நிகழுடைமை யறிவுடைமை நீங்கா மெய்ம்மை
மாண்டசுக முடைமையுப சாந்த நீர்மை
மகிழுடைமை நிறையுடைமை மகிமை பான்மை

இதுவுமது.

ஆவரண மில்லாமை யுதாரத் தன்மை
யழியாத தேசுடைமை யகண்ட நீர்மை
யாவதுந்தா னுமுறைமை யச்ச மின்மை
யேகமாந் தன்மைமன மெழுந்தே டாமை

யோவலிலா துட்னிறையிக்குணங்க ளொன்று
முத்தமிகள் சுமங்கலிக ளொப்பிலாதார்
பாவனையொன் றுஞ்சொரூபமடைந்தேற்கெ
பன்னியரா யுளங்கவரும்பார்வைமாரே[ன்றும்

குறிப்பு:—ஆறு இந்திரியங்களையும் கலிமடித்து ஆத்ம ஸ்வரூபத்தைத் தரிசித்து அதன் சுபாவ சக்திகளோடும் விளையாடிப் பரமசுகியாய் இருந்தார் என்பதாம்.

முற்றிற்று.

சாற்றயிரும் பூமாலை நற்குரங்கின்
கைக்கொடுத்தால்
போற்றிமணங் கொள்ளாவாம்
புத்தி தனக்கில்லாமை
வேற்றொருவர் காணாத
வேதாந்தத் துட்பொருளை
தேற்றமிலி கைக்கொடுத்தேன்
தேறுவதோ தேருமோ.